கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 114/2024

வாதி தரப்பு சாட்சி -1 பழனிமுத்து திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 07.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிமுத்து | கிராமம் | |
| த/பெ | பெருமாள் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 47 |

**வா.சா.1 - பழனிமுத்து- முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. நத்தம் சிட்டா சான்றிட்ட நகல் **வா.சா-ஆ.1**
2. சர்வே எண்.207 , செம்பியநத்தம் கிராமம் நிலபுல வரைபடம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2**
3. தாவா சொத்தின் புகைப்படம் (எண்ணிக்கை 2) குறுந்தகடுடன் **வா.சா.ஆ.3**
4. 21.03.2019 ம் தேதியிட்ட பெருமாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4**
5. வாதியின் குடும்ப வம்சாவழி பட்டியல் **வா.சா.ஆ.5**
6. 09.06.2023 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் சான்று நகல் **வா.சா.ஆ.6**

**( வா.சா.ஆ.3 ஆவணம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 B ன் கீழ் சான்றிதழ் பெறப்படாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிரதிவாதியின் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது )**

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**